செய்தி வெளியீடு எண்: 478 நாள் : 23.09.2014

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (23.9.2014) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அரசுக்கு வழங்கும் 2013–2014ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை 3 கோடியே 13 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ்.பி. சண்முகநாதன் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2006 முதல் 2011 வரை ஈட்டிய மொத்த நிகர லாபம் 12 கோடியே 99 லட்சம் ரூபாய் தான். கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் 2011 முதல் 2014 வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஈட்டிய மொத்த நிகர லாபம் 42 கோடியே 18 லட்சம் ரூபாயாகும். இது 225 சதவிகிதம் கூடுதலாகும்.

கடந்த 2013–ஆம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் முதலிடத்தையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பான நிர்வாக நடவடிக்கைகளின் பலனாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2013–2014ஆம் ஆண்டில் 12 கோடியே 42 லட்சம் ரூபாய் நிகர லாபத்தை ஈட்டியுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் பங்கு முதலீடான 10 கோடியே 42 லட்சம் ரூபாய்க்கு 30 சதவிகித ஈவுத் தொகை 3 கோடியே 13 லட்சம் ரூபாயாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2013–2014ஆம் ஆண்டில் லாபம் ஈட்டியதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட வேண்டிய ஈவுத் தொகையை வழங்கிட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 43வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், முதன்முறையாக அரசுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் 2013–2014ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை 3 கோடியே 13 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ்.பி. சண்முகநாதன் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 23.9.2014